THE HON. SRI C. SUBRAMANIAM: ஆதாரக் கல்வி எந்தப் பள்ளிக்கூடங்களில் இருக்கிறதோ அங்கெல்லாம் இவை சப்ளை செய்யப்படுகின்றன. ஆதாரக் கல்வி முறையில் அந்தப் பள்ளிகள் மாற்றப்படாமலிருந்தால் அந்தப் பள்ளிகளில் பயிற்சி பெற்ற உபாத்தியாயர்கள் இருந்தாலும், சப்ளை செய்யப்படுவதில்லை.

SRI A. VEDARATHNAM: இந்த மாகாணத்தில் உள்ள எல்லாப் பயிற்சி நிலயங்களும், ஆதாரப் பள்ளிகளாக ஏற்படவேண்டும் என்ற திட்டம் எந்த அளவில் நிறை வேற்றப்பட்டிருக்கிறது? சுற்றியுள்ள பள்ளிகளை ஆதாரப் பள்ளிகளாக மாற்றவேண்டும், அங்குள்ள உபாத்தியாயர்களுக்கு ரீட்ரெயினிங், மறுபயிற்சி கொடுக்கவேண்டும் என்பது அமுலாக்கப்பட்டு வருகிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM: முதல் கேள்வியைப் பொறுத்த வரையில், இந்த வருஷம் 8 பயிற்சி நிலயங்கள் ஆதாரப் பள்ளிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. இரண்டாவது திட்டகாலத்திற்குள் எல்லாப் பயிற்சி நிலயங்களும் ஆதாரப் பள்ளிகளாக மாறிவிடும். இன்னொன்றுக்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI C. NATARAJA ODAYAR: அமைச்சர் அவர்கள் அறிவித்தபடி, ஆதாரப் பயிற்சி ஆசிரியர்களுக்கு ராட்டையும், தக்ளியும் அளிக்கப்படுவதால், கல்வித்தரம் குறைகிறது என்ற விஷயம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: 'கல்வி' என்பது என்ன என்பதை அங்கத்தினர் அவர்கள் சொல்வார்களானால், எந்த அளவுக்குக் குறைகிறது அல்லது இல்லை என்று சொல்ல முடியும். பரீக்ஷித்துப் பார்த்தவர்கள், அதிக அறிவு வளர்ச்சி இருப்பதாகவே சொல்லுகிறார்கள்.

Polytechnics

*224 Q.—SRI N. K. PALANISAMI (on behalf of Sri V. K. Kothandaraman): கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1952 முதல் 1957 வரை ஜில்லா வாரியாக எந்தெந்த ஊர்களில் என்னென்ன பாலிடெக்னிக் நிலயங்கள் நடைபெறுகின்றன ?

(ஆ) அவைகளுக்காக 1958–59–ல் ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு?

(இ) 1958–59–வது ஆண்டுகளில் எந்தெந்த ஊர்களில் பாலிடெக்னிக் நிலயங்கள் ஆரம்பிக்க ஏற்பாடாயிருக்கின்றன?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a)

Name of district.	*Place where opened and name of the Polytechnic.*
Chingleput	A.M.M. Charities Polytechnic, Avadi (1957).
Tiruchirappalli ..	Seshasayee Institute of Technology, Tiruchirappalli (1952).
Coimbatore	Nachimuthu Polytechnic, Pollachi (1957).
Ramanathapuram ..	Alagappa Polytechnic, Karaikudi (1955).
	Annamalai Polytechnic, Chettinad (1956).

17th September 1958]

(b) Rs. 8,85,900.

(c) (1) Tanjore.

(2) Virudhunagar (Ramanathapuram district).

(3) Salem.

(4) Thalaiyuthu (Tirunelveli district).

SRI A. GOVINDASAMY : அம்மாதிரி தனியாரால் நடத்தப்படுவது அணைமலை பாலிடெக்னிக்கா, அல்லது முத்தையா பாலிடெக்னிக்கா? அதற்கு எவ்வளவு மான்யம் சர்க்கார் கொடுக்கிறது?

THE HON. SRI C. SUBRAMANIAM : மற்ற நிலையங்களுக்குக் கொடுக்கப்படும்முறையில் தான் இதற்கும் கொடுக்கப்படுகிறது.

SRI N. S. RAMALINGAM : தஞ்சாவூர் நிலையம் நிரந்தரமாக நாகப்பட்டணத்தில் வைக்கவேண்டும் என்ற கோரிக்கை எந்த அளவில் இருக்கிறது?

THE HON. SRI C. SUBRAMANIAM : அது பரிசீலனையில் இருக்கிறது.

SRIMATHI T. N. ANANDANAYAKI : குடியாத்தத்தில் பாலிடெக்னிக் வைப்பது எந்த அளவில் இருக்கிறது?

MR. SPEAKER : The hon. Member may put a separate question as the supplementary question does not relate to the main question.

Madras Cabinet

* 229 Q.—SRI N. K. PALANISAMI (on behalf of SRI V. K. KOTHANDARAMAN) : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) மந்திரி சபையில் மந்திரிகளை அதிகப்படுத்தும் உத்தேசம் உண்டா?

(ஆ) அதற்கான காரணம் என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) No.

(b) Does not arise.

SRI V. SANKARAN : இப்பொழுது குறைவான எண்ணிக்கையே இருப்பதாலும், இதனால் ஒரு சிலருக்கு அதிகமான இலாக்காகள் இருப்பதாலும், பல இலாக்காக்களைப் பார்க்கவேண்டியவர்கள் பொறுப்பு, மனித சக்திக்கு அப்பாற்பட்டதாக இருப்பதாலும், எபிஷியென்ஸி குறைகிறதாலும். . .

MR. SPEAKER : The hon. Member must not use argument when putting questions. Unless he rectifies it and puts it in the form of a question, I shall call upon the next Member.

SRI V. SANKARAN : It is only one sentence, Sir.

MR. SPEAKER : It is not a question of one sentence. It should not contain argument. It is different from the main question.

SRI V. SANKARAN : எபிஷியென்ஸி குறைகிறது என்பதை சர்க்கார் உணர்கிறதா, அதற்காக உடனடியாக நடவடிக்கைகள் அரசாங்கத்தார் எடுப்பார்களா ?

SRI K. ANBAZHAGAN : Sir, the question that was put was read from manuscript. Is reading from a manuscript permissible?